# அரசமைப்புச் (நூற்று ஆறாம் திருத்தம்) சட்டம், 2023

[2023, செப்டம்பர் 28]

இந்திய அரசமைப்பை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபத்து நான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், அரசமைப்புச் (நூற்று ஆறாம் திருத்தம்) சட்டம், 2023 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும்.

239 அ அ உறுப்பிற்கான திருத்தம்.

2. அரசமைப்பின் 239 அ அ உறுப்பின், (2) ஆம் கூறில், (ஆ) உட்கூறுக்குப்பின் பின்வரும் கூறுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"(ஆஅ) தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவையில் பெண்களுக்குப் பதவியிடங்கள் ஒதுக்கீடு

செய்யப்படுதல் வேண்டும்.

(ஆஆ) தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவையில் பட்டியலில்கண்ட சாதியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டப் பதவியிடங்களில் கூடுமான வரையில், மூன்றில் ஒரு பங்கு பதவியிடங்கள், பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆஇ) தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவைக்கு நேரடித் தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் (பட்டியலில்கண்ட சாதியினரைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக) கூடுமானவரையில், மூன்றில் ஒரு பங்கு பதவியிடங்கள் நாடாளுமன்றம், சட்டத்தினால் தீர்மானிக்கும் அத்தகைய முறையில் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல்

வேண்டும்.".

3. அரசமைப்பின் 330 ஆம் உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- புதிய உறுப்பு 330 (அ) ஐ புகுத்துதல்.

"330 (அ). (1) மக்களவையில் பெண்களுக்குப் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். மக்களவையில் பெண்களுக்கான பதவியிடங்களின் ஒதுக்கீடு.

(2). 330 ஆம் உறுப்பின் (2) ஆம் கூறின்படி, ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் கூடுமானவரையில், மூன்றில் ஒரு பங்கு பதவியிடங்கள் பட்டியலில்கண்ட சாதியினரைச் சேர்ந்த அல்லது பட்டியலில்கண்ட பழங்குடியினரைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மக்களவைக்கு நேரடித் தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் (பட்டியலில்கண்ட சாதியினரைச் சேர்ந்த மற்றும் பட்டியலில்கண்ட பழங்குடியினரைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் எண்ணிக்கை

உள்ளடங்கலாக) கூடுமானவரையில் மூன்றில் ஒரு பங்கு பதவியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.”.

புதிய உறுப்பு 332 (அ) ஐ புகுத்துதல்.

4. அரசமைப்பின் 332 ஆம் உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளில் பெண்களுக்கான பதவியிடங்களின் ஒதுக்கீடு.

“332 (அ). (1) மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவையிலும் பெண்களுக்குப் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2). 332 ஆம் உறுப்பின் (3) ஆம் கூறின்படி, ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் கூடுமானவரையில், மூன்றில் ஒரு பங்கு பதவியிடங்கள் பட்டியலில்கண்ட சாதியினரைச் சேர்ந்த அல்லது பட்டியலில்கண்ட பழங்குடியினரைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மாநிலம் ஒவ்வொன்றின் சட்டமன்றப் பேரவையில் நேரடித் தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் (பட்டியலில்கண்ட சாதியினரைச் சேர்ந்த மற்றும் பட்டியலில்கண்ட பழங்குடியினரைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்களின் எண்ணிக்கை உள்ளடங்கலாக) கூடுமான வரையில், மூன்றில் ஒரு பங்கு பதவியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.”.

5. அரசமைப்பின் 334 ஆம் உறுப்பிற்கு பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

புதிய உறுப்பு 334 (அ) ஐ புகுத்துதல்.

“334 (அ). (1) இந்தப் பகுதி அல்லது பகுதி VIII இன் மேலேகண்ட வகையங்களில் எது எவ்வாறிருப்பினும், மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை மற்றும் தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவையில் பெண்களுக்கு

பெண்களுக்கான ஒதுக்கீட்டின் செல்திறம்.

பதவியிடங்கள் ஒதுக்கீடு தொடர்பான அரசமைப்பின் வகையங்கள், அரசமைப்புச் (நூற்று ஆறாம் திருத்தம்) சட்டம், 2023 இன் தொடக்கநிலைக்குப் பின்பு எடுக்கப்பட்ட முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பில் தொடர்புடைய விவரங்கள் வெளியிடப்பட்ட பின்பு, இந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட தொகுதி வரையறைக்குப்பின் செல்திறம் பெறும் மற்றும் அத்தகைய தொடக்கநிலையிலிருந்து பதினைந்து ஆண்டுக் காலஅளவு கழிவுற்ற பின் செல்திறம் அற்றுப்போதல் வேண்டும்.

(2). 239 (அ)(அ), 330 (அ) மற்றும் 332 (அ) ஆகிய உறுப்புகளின் வகையங்களுக்கு உட்பட்டு, மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை மற்றும் தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவையில் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்கள், நாடாளுமன்றம், சட்டத்தினால் தீர்மானிக்கும்

அத்தகைய தேதி வரை தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(3). மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை மற்றும் தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவையில் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பதவியிடங்களின் சுழற்சி முறையானது, நாடாளுமன்றம், சட்டத்தினால் தீர்மானிக்கும் ஒவ்வொரு தொகுதி வரையறையின் பிந்தைய செலுத்துகைக்குப் பின்பு, செல்திறம் பெறுதல் வேண்டும்.

(4). இந்த உறுப்பு அப்போது நிலவுறும் மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை அல்லது தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவை ஆகியவை கலைக்கப்படும் வரையில், மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை அல்லது தில்லி தேசிய ஆட்சிநிலவரையின் சட்டமன்றப்

பேரவை ஆகியவற்றில் உள்ள சார்பாற்றம் எதனையும் பாதிக்காது.’’.

திருத்தச் சட்டம் மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை அல்லது தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவை ஆகியவற்றின் ஒதுக்கீட்டை பாதிக்காது.

6. அரசமைப்புச் (நூற்று ஆறாம் திருத்தம்) சட்டம், 2023 இன் வாயிலாக அரசமைப்பில் செய்யப்பட்ட திருத்தங்களானவை, நேர்வுக்கேற்ப, சொல்லப்பட்டச் சட்டத்தின் தொடக்கநிலையில், அப்போது நிலவுறும், மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை அல்லது தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவை ஆகியவை கலைக்கப்படும் வரையில், மக்களவை, மாநிலமொன்றின் சட்டமன்றப் பேரவை அல்லது தில்லி தேசிய தலைநகர ஆட்சிநிலவரையின் சட்டமன்றப் பேரவை ஆகியவற்றில் உள்ள சார்பாற்றம் எதனையும் பாதிக்காது.